**அ.வ.எண்: 11/2019** **நாள்: 20.08.2025**

வா.சா.1 - துரைராஜ்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை நகல் சரிபார்க்கப்பட்டது.

**<u>1, 2, 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. எனது தாயாரில் பெயரில் எத்தனை சொத்து வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும் 2 சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி 2 சொத்துக்களும் எனது தாயார் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். தற்பொழுது தாவா சொத்து கிரையம் பெற்ற 6, 7 பிரதிவாதிகள் பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்து சம்மந்தமாக எந்த தேதியில் எனது தாயார் மற்றும் சகோதரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகமில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பான வா.சா.ஆ.5 ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். (சாட்சி வா.சா.ஆ.5 பார்த்து பதில் அளித்தார்). நான் அனுப்பிய வா.சா.ஆ.5 ஆவணம் தாவா சொத்தான ஒரே சொத்து சம்மந்தமாக தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மற்ற சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் கேட்டு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

2. 23.02.2019ம் தேதியில் எனது தாயார் மற்றும் சகோதர, சகோதரரிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் தாவா சொத்து என் தாயாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதில் நான் பங்கு கோர முடியாது என்றும் கூறியிருந்தனர் என்றால் பதில் அறிவிப்பை நான் படித்து பார்க்கவில்லை. நான் ஆறாவயலில் வட்டிக்கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். ஆறாவயலில் சொந்த வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆன முதல் எனது தாயார் மற்றும் குடும்பத்தாருடன் பேச்சு வார்த்தை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கின் 3ம் பிரதிவாதியான எனது சகோதரரி காந்திமதி ஒரு மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சகோதரரி இறுதி சடங்கிற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பிற்கு நான் போகவில்லை என்றும், வெளி நபர் போல வீட்டிற்கு வெளியில் நின்று சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, 31 நாட்கள் மேற்படி கிராமத்தில் தான் இருந்தேன். தாவா சொத்திலோ, எனது தாயார் பெயரில் உள்ள

சொத்திலோ எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.